Refugee Legal: Defending the rights of refugees. RACS ASRC Circle Green Community Legal Tasmanian Refugee Legal Service RAILS

# தகவல் ஏடு

## 30 ஜூன் 2021-இற்குள் நேர்காணல் செய்யப்படும் 'துரித-வழி' விண்ணப்பதாரிகளுக்கான சட்ட உதவி

மத்தியக் கூட்டரசினது 'துரித-வழி மதிப்பீட்டு செயல்பாட்டு முறையின் கீழ் தமது முதலாவது 'தற்காலிகப் பாதுகாப்பு விசா' (Temporary Protection visa (TPV) அல்லது 'பாதுகாப்புப் புகலிட முயற்சி விசா' (Safe Haven Enterprise Visa (SHEV))விற்காக விண்ணப்பித்திருந்து ஆனால் இதுவரை அவர்களுடைய விண்ணப்பத்தைப் பற்றி நேர்காணல் செய்யப்படாமல் இருப்பவர்களுக்கான முக்கியத் தகவல்களை இந்தத் தகவலேடு கோடிட்டுக் காண்பிக்கிறது.

இந்த சூழ்நிலையில் இருக்கும் ஒவ்வொருவரும் 30 ஜுன் 2021-இற்குள்ளாக நேர்காணல் செய்யப்படுவார்கள் என்று 'உள்நாட்டு விவகாரத் திணைக்களம்' சுட்டிக்காண்பித்துள்ளது. **இந்த சூழ்நிலையில் இருக்கும் எவரொருவரும் அவசர சட்ட உதவியை நாடவேண்டியது முக்கியம்.**

**நேர்காணல் ஒன்றிற்காக யார் அழைக்கப்படுவார்கள்?**
2015 மற்றும் 2017-ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நீங்கள் ஒரு TPV அல்லது SHEV விசாவிற்காக விண்ணப்பித்திருந்து 'திணைக்கள'த்துடனான பாதுகாப்பு விசா நேர்காணல் ஒன்றிற்கு நீங்கள் சமூகம் **அளித்திருக்கவில்லை** என்றால், 30 ஜூன் 2021-இற்கு முன்பு நேர்காணல் ஒன்றிற்காக நீங்கள் அழைக்கப்படுவதற்கான சாத்தியம் இருக்கிறது. உங்களுடைய நேர்காணலுக்கான நேரம் மற்றும் திகதி ஆகியவற்றிற்கான விபரங்களைத் 'திணைக்களம்' எழுத்து மூலமாக உங்களுக்குத் தெரிவிக்கும்.

**பாதுகாப்பு விசா விண்ணப்ப நேர்காணல் என்பது என்ன?**
உங்களுடைய நாட்டிற்கு நீங்கள் திரும்பிச் செல்வதற்கு நீங்கள் வலுக்கட்டாயப்படுத்தப்பட்டால் உங்களுக்குத் தீங்கிழைக்கப்படும் என்று நீங்கள் **ஏன்** அஞ்சுகிறீர்கள் என்பதற்கான காரணங்களைத் 'திணைக்கள' அதிகாரி ஒருவருக்கு நீங்கள் விளக்கிச் சொல்லவும், **உங்களுடைய விடயத்திற்கு ஆதாரமாக இருக்கும் எவ்வொரு கூடுதல் தகவல்களையும் அளிப்பதற்கும் இந்த நேர்காணல் முக்கியமானதொரு வாய்ப்பு ஆகும்.**

இந்த நேர்காணலுக்கு நீங்கள் சமூகம் அளிக்க வேண்டியது முக்கியம். நேர்காணல் ஒன்றில் உங்களுடைய விடயங்களைப் பற்றி விளக்கிச் சொல்வதற்கு **உங்களுக்கு இருக்கும் ஒரே** வாய்ப்பாக இந்த நேர்காணலே எனும் சாத்தியம் இருக்கிறது.

**நீங்கள் இப்போது செய்ய வேண்டிய விடயங்கள்?**
உங்களுடைய TPV/SHEV விசாவிற்கான முதலாவது விண்ணப்பத்தைப் பற்றி நீங்கள் இன்னும் நேர்காணல் செய்யப்படாமல் இருந்தால், பின் வருவனவற்றை நீங்கள் செய்யவேண்டியது முக்கியம்:

1. உங்களுடைய நேர்காணலுக்கான அழைப்புக் கடிதம் உங்களுக்கு வந்து

சேர்வதை உறுதிப்படுத்த **உங்களுடைய தற்சமயத்தியத் தொடர்பு விபரங்கள் திணைக்களத்திடம் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்**. இதை நீங்கள் செய்வதற்கு எம்முடைய அமைப்பினால் உங்களுக்கு உதவ இயலும்.

2. உங்களுடைய நேர்காணலுக்கு ஆயத்தம் செய்வதைப் பற்றிய **சட்ட உதவியை கூடிய விரைவில் பெறுங்கள்**. சட்ட உதவி உதவிக்காக, கீழே பட்டியலிடப்பட்டுள்ள அமைப்புகளில் ஏதாவதொன்றுடன் தொடர்புகொள்ளுங்கள், அத்துடன் உங்களுடைய TPV/SHEV விண்ணப்பம் சம்பந்தப்பட்ட, உங்களிடம் இருக்கக்கூடிய எவ்வொரு ஆவணங்களையும் எமக்கு அனுப்பிவையுங்கள்.
3. **உங்களுடைய விடயத்தைப் பற்றிய புதிய தகவல்கள் மற்றும் ஆதாரங்களைச் சேகரியுங்கள்.** உங்களுடைய விடயத்தைப் பற்றி உங்களுடன் பேசிய பிறகு எந்த வகைப்பட்ட ஆதாரங்களைத் திரட்டி நீங்கள் திணைக்களத்திற்குக் கொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி உங்களுக்கு அறிவுரைக்க எம்மால் இயலும்.

## இலவச சட்ட உதவிக்காக தயவு செய்து பின்வரும் இலவச சட்ட அமைப்புகளில் ஒன்றுடன் தொடர்புகொள்ளுங்கள்

**Refugee Legal** ('ரெஃப்யூஜீ லீகல்') காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை வார நாட்களில் 03 9413 0101-ஐ அழையுங்கள் அல்லது **clinic@refugeelegal.org.au** எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் (விக்டோரியா மற்றும் சவுத் ஆஸ்திரேலியா மாநிலங்களில் உள்ளவர்களுக்காக)

**ASRC** காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை வார நாட்களில் 0422035324-ஐ அழையுங்கள் அல்லது legal@asrc.org.au எனும் முகவரிக்கு பொருள் குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில் "Fast Track Interview" எனும் வாசகத்தினை உள்ளடக்கி மின்னஞ்சல் செய்யுங்கள் (விக்டோரியா மற்றும் சவுத் ஆஸ்திரேலியா மாநிலங்களில் உள்ளவர்களுக்காக)

**RACS** திங்கள் முதல் வெள்ளி காலை 10 மணியிலிருந்து மதியம் 1 மணி வரை மற்றும் மதியம் 2 மணியிலிருந்து மாலை 4 மணி வரை (02) 8355 7227-ஐ அழையுங்கள் அல்லது admin@racs.org.au எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் (நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்திலும் வட எல்லைப்பகுதியிலும் உள்ளவர்களுக்காக)

**CIRCLE GREEN** ('**சர்க்கிள் க்ரீன்**') 08 6148 3648-ஐ அழையுங்கள் அல்லது migration@circlegreen.org.au எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள் அல்லது நேரடி வருகை சேவைக்கு 1 தொரோகுட் சாலை, பர்ஸ்வுட்-இல் அமைந்துள்ள 'ரிவர்வியூ சர்ச்' புகலிடம் நாடுவோர் மைய'த்திற்கு ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் மாலை 2 மணி முதல் மாலை 5 மணி வரை செல்லுங்கள் (மேற்கு ஆஸ்திரேலியா மாநிலத்தில் உள்ளவர்களுக்காக).

**'RLS TAS** டாஸ்மேனியன் ரெஃப்யூஜீ லீகல் சர்வீஸ்' 03 6169 9473-ஐ அழையுங்கள் அல்லது **info@trls.org.au** எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் திறப்பு நேரம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை (டாஸ்மேனியா மாநிலத்தில் உள்ளவர்களுக்காக)

**RAILS** திங்கள் முதல் வெள்ளி காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை (07) 3846 9300 ஐ அழையுங்கள் அல்லது paralegal2@rails.org.au எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் (மின்னஞ்சல் தெரிவு செய்யப்படும் வழியாகும்) (க்வீன்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ளவர்களுக்காக)